## தேசிய செய்திகள்

**புதுதில்லியில் "தேசிய ஆயுஷ் மிஷன் மாநாடு 2023"-ஆனது மத்திய அமைச்சர் சர்பானந்தா சோனோவால் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.**

- ஆயுஷ் அமைச்சகத்தின் முதன்மையான திட்டமாக உள்ள தேசிய ஆயுஷ் மிஷனின் (NAM) இரண்டு நாள் மாநாட்டை மத்திய ஆயுஷ் அமைச்சர் சர்பானந்தா சோனோவால் 18 மே அன்று தொடங்கி வைத்துள்ளார்.
- இந்த மாநாடானது "பங்குதாரர்களிடையே சிறந்த ஒருங்கிணைப்புக்கு வழி வகுக்கும் மற்றும் ஆயுஷ் உடல்நலம் மற்றும் ஆரோக்கிய மையங்களின் செயல்பாட்டை வலுப்படுத்தும்" என்று மத்திய அமைச்சர் தெரிவித்துள்ளார்.

**DHR - WHO இடையேயான தொழில்நுட்பம் தொடர்பான ஒத்துழைப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதற்கு மத்திய அரசு ஒப்புதல்.**

- இந்தியாவின் சுகாதார ஆராய்ச்சித் துறைக்கும் (DHR) உலக சுகாதார அமைப்புக்கும் (WHO) இடையிலான உதவித் தொழில்நுட்பம் தொடர்பான திட்ட ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.
- ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்புகளைமேம்படுத்துதல் மற்றும் உதவி தொழில்நுட்பத்தை அணுகுவதில் உலகளாவிய கவனத்தை ஈர்ப்பது ஆகியவற்றை இந்த ஒப்பந்தமானது நோக்கமாகக் கொண்டுள்ளது.

**மத்திய தகவல் தொடர்பு துறை அமைச்சகம் ORAN என்ற சோதனை படுக்கை திட்டத்தை தொடங்கியுள்ளது.**

- தீர்வுகளின் இணக்கம், சான்றிதழ் மற்றும் இயங்குநிலை மேம்பாட்டிற்காக, "திறந்த வானொலி அணுகல் நெட்வொர்க் (ORAN)" சோதனை படுக்கை திட்டத்தை(Test Bed), தகவல் தொடர்புத்துறை இணை அமைச்சர் தேவ்சின் சவுகான் 17 மே அன்று புதுதில்லியில் தொடங்கி வைத்துள்ளார்.
- இது ORAN உறுப்புகளின் சோதனையை எளிதாக்கவும் மற்றும் இந்தியாவில் முழு உள்நாட்டு 5G ரேடியோ நெட்வொர்க்கின் வளர்ச்சியை எளிதாக்கவும் இந்த சோதனையானது நோக்கமாக கொண்டுள்ளது.

**ITதுறையின் வன்பொருளுக்கான ₹17,000 கோடி PLI திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது**.

- அதிநவீன எலக்ட்ரானிக்ஸ் உற்பத்தியை உள்நாட்டில் விரைவுபடுத்தும் வகையில், ITதுறையின் வன்பொருளுக்கான ₹17,000 கோடி PLI திட்டத்திற்கு மத்திய அமைச்சரவையானது ஒப்புதல் அளித்துள்ளது.
- மடிக்கணினிகள், தனிப்பட்ட கணினிகள் (PC), ஆல்-இன்-ஒன் கணினிகள், சர்வர்கள் மற்றும் மிகச்சிறிய வடிவ காரணி சாதனங்கள் போன்ற உயர்-தொழில்நுட்ப எலக்ட்ரானிக்ஸ் உற்பத்தியை மேம்படுத்த இந்த திட்டமானது உதவும் என மத்திய அரசு தெரிவித்துள்ளது.
    - PLI - Production Linked Incentive Scheme

**2024ல் இந்தியப் பொருளாதாரம் 6.7% வளர்ச்சியடையும் என ஐநா தனது அறிக்கையில் வெளியிட்டுள்ளது.**

- சமீபத்தில் ஐநாவால் வெளியிடப்பட்ட உலகப் பொருளாதார நிலை மற்றும் வாய்ப்புகள் அறிக்கை 2023-ன்படி இந்தியாவின் பொருளாதாரமானது 5.8% லிருந்து, 2024 ஆம் ஆண்டில் 6.7% ஆக உயரும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.
- இந்த வளர்ச்சியானது "வலுவான உள்நாட்டு தேவையால் அதிகரிக்கப்படும்" என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சர்வதேச செய்திகள்

**ஆப்கானிஸ்தானின் பிரதமராக "மவ்லவி அப்துல் கபீர்" பொறுப்பேற்பு.**

- ஆப்கானிஸ்தானில், தலிபான் அமைப்பானது "மவ்லவி அப்துல் கபீரை" தற்காலிக பிரதமராகவும், அமைச்சரவையின் இடைக்கால தலைவராகவும் நியமித்து அறிக்கை வெளியுட்டுள்ளது.
- தலிபான் ஆட்சியின் தற்போதைய செயல் தலைவரான முல்லா முகமது ஹசன் அகுண்டின் உடல்நலக்குறைவு காரணமாக இந்த முடிவானது எடுக்கப்பட்டுள்ளது என தலிபான் அரசாங்கம் தெரிவித்துள்ளது.

**அரசுக்கு சொந்தமான "நிறுவனங்களின் சீர்திருத்த கொள்கைக்கு" இலங்கையின் அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.**

- அரசாங்கத்தின் நிதியை வலுப்படுத்தவும் பொருளாதார மீட்சியை எளிதாக்கும் முயற்சியில் அரசுக்கு சொந்தமான நிறுவன சீர்திருத்தங்களை மேற்கொள்ளும் கொள்கைக்கு இலங்கையின் அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- இந்தக் கொள்கையின் மூலம், மாறும் விலைக்குக் குறைவான பொருட்களை விற்பதால் ஏற்படும் திவால் நிலையைத் தடுக்கவும், நாட்டின் வரவு செலவுத் திட்டத்தைச் ஏற்காத, சந்தை சார்ந்த நிறுவனங்களாக அரசு நிறுவனங்கள் மாற்றமடையும் எனவும் இலங்கை நிர்வாகம் தெரிவித்துள்ளது.

**இலங்கையில் 3 மாகாணத்திற்கு புதிய ஆளுநர்கள் நியமனம்.**

- இலங்கையின் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கே 3 மாகாணங்களில் புதிய ஆளுநர்களை நியமித்துள்ளார்.
- பி.எஸ்.எம்.சார்லஸ் வட மாகாண ஆளுநராகவும்,இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான் கிழக்கு மாகாண ஆளுநராகவும், இலங்கை சுதந்திரக் கட்சியின் உறுப்பினர் லக்ஸ்மன் யாப்பா வடமேற்கு மாகாண ஆளுநராகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

## மாநில செய்திகள்

**இந்தியாவின் 17வது வந்தே பாரத் ரயில் சேவையானது ஒடிஷாவில் தொடக்கம்.**

- இந்தியாவின் 17வது மற்றும் ஒடிசாவின் முதல் வந்தே பாரத் ரயில்சேவையை பிரதமர் நரேந்திர மோடி மே 18 அன்று தொடங்கி வைத்துள்ளார்.
- ஹவுரா மற்றும் பூரி இடையே இந்த ரயில் இயக்கப்படுகிறது. இது "ஒடிசாவிற்கு முதல் அரை அதிவேக ரயிலாகவும், மேற்கு வங்க மாநிலத்திற்கு இரண்டாவது ரயிலாகவும்" அமைகிறது..

ExamsDaily

**சித்தராமையா கர்நாடகாவின் முதல்வராக பொறுப்பேற்பு.**

- கர்நாடகாவில் சமீபத்தில் நடந்துமுடிந்த தேர்தலின் முடிவில் காங்கிரஸ் வெற்றி பெற்று புதிய முதல்வராக காங்கிரஸ் மூத்த தலைவர் சித்தராமையாவும், துணை முதல்வராக டி.கே.சிவகுமாரும் மே 20 அன்று பதவி பிரமாணம் எடுக்க உள்ளனர்.
- இந்த இரு தலைவர்களும் "சுழற்சி முறைக்கு" ஒப்புக் கொண்டதன் மூலம் காங்கிரஸ் கட்சியானது இந்த முடிவை எடுத்துள்ளது. அதாவது சித்தராமையா 2.5 ஆண்டுகள் முதல்வராகவும், சிவக்குமார் 2.5 ஆண்டுகள் முதல்வராகவும் பதவி வகிப்பார்கள் என்றும் காங்கிரஸ் கட்சி தெரிவித்துள்ளது.

**குவகாத்தியில் ஏழு மதத் தலங்களை நீர்வழிகள் மூலம் இணைக்க திட்டம்**

- சாகர்மாலா திட்டத்தின் மூலம் குவகாத்தியில் அமைந்துள்ள காமாக்யா, பாண்டுநாத், அஷ்வக்லாந்தா, டூல் கோவிந்தா, உமானந்தா, சக்ரேஷ்வர் மற்றும் அவுனியாதி சத்ரா ஆகிய ஏழு வரலாற்றுக் கோயில்களை இணைக்கும் திட்டமானது கட்டமைக்கப்பட்டுள்ளது.
- இதன் மூலம் படகுச் சேவையை மேற்கொள்ளும் பயணிகள் ஒரு முழுமையான சுற்றுப் பயணத்தை முடிப்பதற்கு ஒட்டுமொத்த பயண நேரத்தை 2 மணி நேரத்திற்கும் குறைவாகக் குறைக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## விருதுகள்

**இந்தியருக்கு பிரான்ஸ் நாட்டின் உயரிய சிவிலியன் விருது வழங்கப்பட்டது.**

- டாடா சன்ஸ் நிறுவனத்தின் தலைவர் நடராஜன் சந்திரசேகரனுக்கு, பிரான்ஸ் நாட்டின் உயரிய மற்றும் மதிப்புமிக்க "செவாலியர் டி லா லெஜியன் டி'ஹானர்" (நைட் ஆஃப் தி லெஜியன் ஆஃப் ஹானர்) விருதானது வழங்கப்பட்டுள்ளது.
- பிரான்சுக்கும் இந்தியாவுக்கும் இடையேயான வர்த்தக தொடர்புகளை மேம்படுத்தி வளர்ப்பதில் கணிசமான பங்களிப்பை சந்திரசேகரன் மேற்கொண்டதால் இந்த விருது அவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

## விளையாட்டு செய்திகள்

**ஃபெடரேஷன் கோப்பை 2023 - பெண்களுக்கான 100 மீ தடைதாவல்(Hurdles) ஓட்டத்தில் "ஜோதி யர்ராஜி" தங்கம் வென்றுள்ளார்.**

- ஜார்கண்டின் ராஞ்சியில் உள்ள பிர்சா முண்டா மைதானத்தில் நடைபெற்ற "ஃபெடரேஷன் கோப்பை தடகளப் போட்டியில்" பெண்களுக்கான 100 மீ தடைதாவல்(Hurdles) ஓட்டத்தில் ஜோதி யர்ராஜி தங்கப் பதக்கம் வென்றுள்ளார்.
- ஜோதி 12.89 வினாடிகளில் ஓடி முதலிடம் பெற்றுள்ளார் மற்றும் அவரை தொடர்ந்து நித்யா ராம்ராஜ் (13.44 வி) மற்றும் சப்னா குமாரி (13.58 வி), 100 மீ தடை ஓட்டத்தில் இரண்டாவது மற்றும் மூன்றாவது இடங்களைப் பெற்றுள்ளனர்.

## இரங்கல் செய்திகள்

**ஹரியானா மாநிலத்தை சேர்ந்த அம்பாலா எம்பி ரத்தன் லால் கட்டாரியா காலமானார்.**

- ஹரியானாவின் அம்பாலா பகுதியை சேர்ந்த பாரதிய ஜனதா கட்சி எம்பி ரத்தன் லால் கட்டாரியா நீண்டகால உடல்நலக்குறைவு காரணமாக மே 18 அன்று காலமானார்.
- இவர் மூன்று முறை எம்பியாகவும், ஜல் சக்தி அமைச்சகம் மற்றும் சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகத்தின் இணை அமைச்சராகவும் ஜூலை 7, 2021 வரை பணியாற்றியுள்ளார்.

## முக்கிய தினம்

**உலக எய்ட்ஸ் தடுப்பூசி தினம்**

- ஒவ்வொரு ஆண்டும் மே 18 அன்று, உலக எய்ட்ஸ் தடுப்பூசி தினம் அல்லது எச்ஐவி தடுப்பூசி விழிப்புணர்வு தினம் என்று கொண்டாடப்படுகிறது.
- உலகெங்கிலும் தடுப்பூசியின் ஆராய்ச்சி செயல்முறையைத் தூண்டும் "கிளிண்டன் உரையின்" ஆண்டு நிறைவை இந்த நாள் நினைவுபடுத்துகிறது.

Examsdaily